# தலைவர் பிரபாகரனே முதற் கரும்புலி - அன்ரன் பாலசிங்கம்

(வடமராட்சி)

உலக போராட்ட வரலாற்றில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனே முதற் கரும்புலி. கரும்புலிகள் என்றுல் நிறத்தையோ, ஒரு இனத்தையோ குறிப்பதல்ல. இரும்பை ஒத்த மன உறுதியையும் சாவுக்கு அஞ்சாத வீரர்களையும் கொண்டது.''

இவ்வாறு விடுதலைப்புலிகளின் பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் வல்வை நெடியகாடு விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற 'கரும்புலிகளின்' எழுச்சி தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர். அங்கு அவர் மேலும் பேசுகையில், (3ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 66 வைகாசி 2 துல்ஹஜ்ஜா 1 இதழ்: 95

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16-5-1991


16-5-1991

## ஆனையிறவு பகுதியில் கடும் விமான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் நண்பகலில் அகோர விமானத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன் மேற்படி முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதலும் இடம்பெற்றது.

நண்பகல் 2-10 மணியிலிருந்து 4-15 வரை அவ்ரோ விமானம் ஒன்று, 3 பொம்மர்கள், 3 ஹெலிகள் கடும் தாக்குதல்களில் ஈடுபட்டன. அவ் [4-ம் பக்கம் பார்க்க]

## ஓய்வூதியம் பணமாக

(யாழ்ப்பாணம்)

யாழ். இலங்கை வங்கி மேற்தர கிளையில் சித்திரை மாதத்திற்கான ஓய்வூதியக்கொடுப்பனவுகள், இன்று 16ம் திகதியும் நாளையும் பணமாக வழங்கப்படும்.

# வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு சமஷ்டி முறையிலான தீர்வுக்கு அரசு தரப்பிற்கு ஆலோசனை!

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு 'சமஷ்டி' முறையிலான தீர்வொன்றைக் காணுமாறு, அரசுக்குப் பல ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான முக்கிய முடிவை மேற்கொள்ள ஜனுதிபதிக்கு இந்த ஆலோசனையின் விபரங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

புலிகளுடன் பேச்சு வார்த்தை ஏதாவது நடைபெறும் பட்சத்தில் அவர்களின் நிலைப்பாட்டை அறிந்தபின் அரசின் யோசனையை முன்வைக்குமாறும் அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்த அரசு தரப்பு யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்தி அதன்மூலம் புலிகளை நேரடியாக சந்திக்க முயல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'சமஷ்டி' முறையிலான தீர்வு குறித்து அண்மைக் காலங்களில் சுவீடன், கனடா, சுவிற்சர்லாந்து ராஜதந்திரிகள் உட்பட இலங்கையின் 'லிப வர்த்தனும் குறிப்பிடத்தக்கது ரல்' கட்சியும் வலியுறுத்தி (சி)

## மாணிக்கவாசகர் இன்று பதவியேற்கிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திரு. கார்த்திகேசு மாணிக்கவாசகர் இன்று காலை யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் பதவியைப் பொறுப்பேற்பார்.

இவர் முன்பு கிளிநொச்சி அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. [153]

## புலிகளின் வீரவரலாற்றை சுவீடன் பேராசிரியர் எழுதுகிறார்

(வடமராட்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை சுவீடன் நாட்டு பேராசிரியர் ஒருவர் எழுதவுள்ளார்.

இது தொடர்பாக இந்த பேராசிரியர் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக அவர் புலிகளின் பேச்சாளர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பல விளக்கங்களையும் பெற்றுள்ளார். (51-சி)

## இந்திய தேர்தல்: 9 வேட்பாளர்கள் கொலை

(புதுடில்லி)

இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் 9 வேட்பாளர்கள் இதுவரை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பஞ்சாபில் அறுவரும், ஆந்திராவில் இருவரும் பீகாரில் ஒருவருமாக 9 வேட்பாளர்கள் கொல்லப்பட்டதுடன் 3 வேட்பாளர்கள் பலத்த காயங்களுடன் தப்பியுள்ளனர்.

பல வேட்பாளர்களுக்கு கொலைப்பயமுறுத்தல்விடுக்கப்பட்டுமுள்ளது. (சி)

## தமிழர் மீது சூடு ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று பனங்காடு பகுதி விசேட அதிரடிப்படை முகாமின் முன்சென்ற இரு தமிழர் மீது படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த 9ம் திகதி மாலை 7-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதே வேளை மற்றையவர் தப்பியோடி விட்டார்.

இதேவேளை வந்தாறுமூலை பகுதியில் இடம்பெற்ற மோதலில் வீரவேங்கை திலக் (அழகையா ஜெயபாலு வந்தாறுமூலை) வீரமரணமடைந்தார். இம்மோதல் கடந்தமாதம் 20ம் திகதிமாலை நடைபெற்றுள்ளது. (ச)

## வவுனியா பகுதியில் 25 பேரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் இராணுவ நடமாட்டம் உள்ள இடங்களில் அகப்பட்ட 25க்கும் மேற்பட்டோர் நிலை பற்றி எதுவும் தெரியவில்லை.

2-ம், 3-ம், 4-ம் திகதிகளி (4-ம் பக்கம் பார்க்க)

## ● வாழைச்சேனை காகித ஆலையைச் சேர்ந்த பன்னிரெண்டு ஊழியர் பலி 12 பேரை காணவில்லை

(மட்டக்களப்பு)

கடந்த வருட யூன் மாதத்திற்குப் பின்னரான ஒன்பது மாத காலத்தில் வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்கள் 12 பேர் இராணுவ நடவடிக்கையால் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 12 ஊழியர்களை காணவில்லை எனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ. கனகரட்னம், எஸ். செல்வம், பி. இராமநாதன், பி. மகேஸ்வரன், எஸ். சிவலிங்கம், எஸ். கிருபைராசா. என். திசானரெட்ணம், எஸ் தங்கராசா, எஸ். யோகநாதன், எஸ் சகாதேவராசா, எஸ். சந்திரசேகரம்பிள்ளை, ஏ. யு. எம். அலி ஆகியோரே [4ம் பக்கம் பார்க்க]

## க. பொ. த. விஞத்தாள்கள் இன்று யாழ். வரும்

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித் திணைக்களத்துக்கு, க. பொ. த. (உயர் தரம்) 1990 விசேட பரீட்சைக்கான இரண்டாம் வினத்தாள் தொகுதி இன்று வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த வினத்தாள் தொகுதி ஏற்கனவே கப்பலில் அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் (4-ம் பக்கம் பார்க்க)

## ஐம்பத்திரெண்டு தமிழர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

யூகோஸ்லாவியா ஊடாக இத்தாலி செல்ல முயன்ற 52 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டு இலங்கைக்குத் (4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### லண்டன் பரீட்சை

CIMA., I D. P. M.; A.A.T., I.A.B., Computer-Basic வகுப்புகள் 18-05-91 முதல் சிறந்த விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்படும். School of Business Administration, 16, 3வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

(சி 4725)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு-5)

புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 19-05-91 ஞாயிறு மு. ப. 8.00 மு. ப. 10 30 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் பி. ப. 4.00 மணிக்கு மக்கள் வைத்தியசாலை முன்பாக, குளப்பிட்டி -ஆனைக்கோட்டை வீதி, நடைபெறும் பதிவு செய்பவும் புலமைப்பரிசில் மாதிரி வகுப்புகள், Weekend Class ஆரம்பமாகியுள்ளன: ஆண்டு4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடல்களும் நடைபெறுகின்றன.

(சி 4734)

### தேவை

மலைவேம்பு விதை தேவை, மில்க்வைற் யாழ்ப்பாணம்.

(ஏ 1303)

### "முள்முடி மன்னர்கள்"

மீரா வெளியீடு "இதம்பர திருச்செந்திநாதன் எழுதியது சுமப்பதோ முள் முடி நினைப்போ மன்னர்கள்சொந்த மண்ணில் அந்நியப்பட்டு நிற்கும் சிலரின் கதை "இந்நூலில்" அக்கினி வாசகர்பரிசு கூப்பனை அனுப்பியவர்களின் குலுக்கலில் தெரிவுசெய்யப்பட்ட 400/- ரூபா புத்தகங்கள் பரிசைப்பெறும் பத்து வாசகர்களின் விபரமும் பரிசு பெறவேண்டிய இடங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

[சி 4733]

### பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் தெற்கு சிவபூரணாயர் கோவிற் பரிபாலன சபை பொதுக்கூட்டம் இம் மாதம் 19ம் திகதி சிவபூதராயர் கோவில் மண்டபத்தில் நடைபெறும்.

## வவுனியா மோதலில் 20 புலிகள் வீரமரணம்

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தில் கடந்த 12-ம் திகதி கோழியா குளம், மாதர் பணிக்க மகிழம் குளம், இறம்பைக் குளம், பூவரசங்குளம் பகுதிகளில் இடம்பெற்ற கடும் மோதலில் 20 புலிகள் வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்த புலிகளின் விபரம்:

2-ம் லெப். அலோசியஸ் [கந்தையா ரவிச்சந்திரன் நாகதாழ்வு, மன்னார்], லெப். கஸ்ரோ [இராசப்பு விமலநாதன் இருதயபுரம், மூதூர்], 2-ம் லெப் கீதன் [சுந்தரலிங்கம் விமலச்சந்திரன் செம்மலை, மணலாறு], 2-ம் லெப். ஜெனு [யோகநாதன் பிரான்சிஸ், பள்ளிமுனை. மன்னார்], 2-ம் லெப் மண்டேலா [தமிழ்ச்செல்வன் தமிழகன் - ஆறுகால்மடம், யாழ்ப்பாணம் 2-ம் லெப். வியாசன் [காராளசிங்கம் விக்கினேஸ்வரன், பெரியகுளம், நெடுங்கேணி] 2-ம் லெப். நியூட்டன் [த. இரேசியன் - நல்லூர், யாழ்ப்பாணம்], 2-ம் லெப். செட்டி [பெரியசாமி லோகேஸ்வரன்- 5-ம் கட்டை அலம்பில் மணலாறு], 2-ம் லெப். நிச்சாட் [சித்திரவேல் நாகேந்திரன் - இராசபுரம், மூதூர்], ஈஸ்வரன் [பெருமாள் சசிக்குமார்- அடம்பன், மன்னார்], சிவசங்கர் [நேசராசா உதயகுமார் - தும்பன்கேணி], கீரோ [இராமகிருஷ்ணன் ஜெயராசா - நீர்வேலி, யாழ்ப்பாணம்], லோகா [சௌபத்றியான் டேவிற் - அரியாலை, யாழ்ப்பாணம்], தேவா [ஜஸ்ட்மன் செல்ட்டன் - தலைமன்னார், மன்னார்], புஷ்பகாந் [ஐயாத்துரை சிவதர்சன் - குஞ்சுக்குளம் மல்லாவி, முல்லைத்தீவு], பீலிஸ் [சுந்தரலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை, முல்லைத்தீவு], மனோஜ் [யாழ்ப்பாணம்), வின்சன் [இராசரத்தினம் சுதாகரன் - பரந்தன், கிளிநொச்சி] அருள் [முருகையா செல்வச்சந்திரன் - நாவற்குழி, யாழ்ப்பாணம்], அன்பன் ஆகியோரே வீரமரணமடைந்த போராளிகளாவர்.

இம் மோதலில் 50 இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (வி)

## யாழ். பல்கலைக்கழகத்தில் போதனா வைத்தியசாலை அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அருகாமையில், ஐந்து மாடி கொண்ட புதிய போதனா வைத்தியசாலையை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே கட்டப்பட்டுவந்த ஐந்து மாடிக் கட்டட வேலைகள் இடைநடுவில் கடந்த நான்கு வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்படி கட்டடம், கட்டப்பட்ட அளவிலேயே பயன்படுத்தப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி ஐந்து மாடிக் கட்டட வேலைக்கென 4 லட்சம் ரூபா நிதி மட்டுமே இருப்பதாகவும், இதன் காரணமாக இவ்வேலையைத் தொடர்ந்து செய்வது சாத்தியமாகாது என்பதால், போதனா வைத்தியசாலைக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய இந்நிதி பயன்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## இரத்ததானம் உறவினர் வழங்க வேண்டும்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு போதியளவு மின்சாரம் கிடைத்தால் தேவையான அளவு இரத்தத்தை சேமித்து பாதுகாத்து வைக்கக்கூடியதாக இருக்குமென்று கூறப்படுகிறது.

நோயாளிக்கு இரத்தம் கொடுக்க வேண்டியதாயின் மிகக் கிட்டிய உறவினர் மாத்திரமே இரத்தவங்கிக்கு வருகைதரவேண்டும். பிறரை பணத்திற்கு அமர்த்தி அவர்களை உறவினர் என்று கூறி இரத்தம் கொடுக்கச்செய்ய எத்தனிப்பதால் பல நோய்கள் பரவ இடமுண்டு என்று இரத்தவங்கி அலுவலர் தெரிவித்தார். (153)

# ஓராண்டு நினைவு தினம்



## திருமதி இராசு இராசமணி

தோற்றம்: 9-6 1937 மறைவு: 27-5-1990

திதி: 17-5-91

ஆண்டு பிரமோதூதம் ஆனவைகாசி ஞாயிறு பூண்ட பூர்வபக்க திருதியை திதியதனில் - நீண்டபுகழ் இராசு இராசமணி இந்நிலம் விட்டகன்றுள் பாசமலர் சொரிய இங்கு

(குறிப்பு) அன்னாரின் ஆத்ம சாந்திக்காக (17-5-91) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

கணவன், மக்கள், மருமக்கள்.

சி. இராசு ஜே. பி. பேரப்பிள்ளைகள்.

24, பழம் றோட், கந்தர்மடம்,

யாழ்ப்பாணம். (சி 4730)

## யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

## மாணவர் வதிவிடம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகள் / அறைகள் தேவைப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை / வீட்டின் ஒருபகுதியினை / வாடகைக்கு கொடுக்க விரும்பினால் பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரைச் சந்திக்கவும். அத்துடன் அவரிடம் இதற்கெனவுள்ள படிவத்தை பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பங்களை 05-06-91 இற்கு முன் அவரிடம் கொடுக்கவும்.

பதிவாளர்.

(ஏ-1307)

## தனியார் கல்விநிறுவன ஒன்றியம் யாழ்மாவட்டம்

## பொது அறிவித்தல்

★ 93 உயர்தரப் பிரிவு எதனையும் ஆரம்பிக்க வேண்டாம். ஆரம்பிப்பது வருமானநோக்கை மட்டும் கொண்டிருப்பது தெளிவாகின்றது. இச் செயல் மாணவருக்கு பெருங்குழப்பத்தையும் தன்னம்பிக்கை குறைவையும் ஏற்படுத்துகின்றது இச் செயலில் ஈடுபடவேண்டாம் என தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது.

★ திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் வகுப்புக்களை நடாத்துதல் ஒரு அத்துமீறும் செயலாகும். இதனை தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கண்டிப்பதுடன் இது பற்றிய தகவல்களை சேகரித்தும் வருகின்றது.

பொதுச் செலாளர்.

(சி 4739)

## நெஞ்சத்தகலா நினைவுடன் 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மு. சி. சிற்றம்பலம்

தோற்றம்: 02-04-1908 மறைவு: 18-05-1988

திதி 16-5-1991

திருமுருக பக்திமிகச் சிந்தையில் ஊறியே
தினந்தினம் பெருக அன்பில்
திளைத்துக் குழைந்துளம் செம்மாந்தமர்பவன்
சிற்றம்பலத் தொண்டனே

மனைவி, மக்கள்.

வங்களாவடி, வேலணை. (சி 4737)

# "வெளிநாடு செல்லும் நிலைமைமாறி எல்லோரும் ஒன்றிணைந்து போராடினால் விரைவில் மண்ணை மீட்கமுடியும்" - ஆஞ்சநேயர்

(சித்தன்கேணி)

உலகமே இன்று எமது போராட்டத்தை நினைத்து வியப்பில் ஆழ்ந்துகொண்டிருக்கின்றது உலகத்தில் உள்ளவர்கள் தமிழனாய் பிறக்கவேண்டும் அதிலும் போராட்டம் நடந்துகொண்டிருக்கும் தமிழ் ஈழ மண்ணில் பிறக்க வேண்டும் என்று ஆவல் கொண்டுள்ளனர். இந்த மண்ணை புனிதமான மண்ணாக நேசிக்கின்றனர். ஆனால் எம்மவர்கள் அடிமை வாழ்வு வாழ்வதற்கு கனடா, லண்டன் போன்ற மேற்கத்திய நாடுகளுக்கு குடும்பமாகவும் தனியாகவும் சென்றுகொண்டிருக்கின்றனர்''

இவ்வாறு யாழ் மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கடற்கரும்புலிகள் நினைவு எழுச்சிநாள் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

வலிகாமம் பிரசாரப் பொறுப்பாளர் திரு. பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவு எழுச்சிநாள் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

அரசியல் பொறுப்பாளர் திரு. பகின் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார் யாழ். மாவட்ட மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. மூர்த்தி மேஜர் காந்தருபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ், கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெகநாதன் ஆகியோரின் உருவப்படங்களுக்கு விளக்கேற்றி வைத்தார்.

கடற்கரும்புலிகள் ஐவரின் உருவப்படங்களையும் யாழ் மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் திரை நீக்கம் செய்துவைத்தார்.

யாழ். மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி கடற்கரும்புலிகள் ஐவரின் உருவப்படங்களுக்கும் மாலை அணிவித்தார்.

திரு ஆஞ்சநேயர் தொடர்ந்து கூறியதாவது:-

வெளிநாடு செல்லும் நிலை மாறி எல்லோரும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலம் எமது மண்ணை விரைவில் மீட்டெடுக்கமுடியும் இந்த மண்ணை மீட்டு எடுப்பதற்கும் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காவும் தமது சுக போக வாழ்க்கையை மறந்து இதுவரை சுமார் 2750க்கு மேற்பட்ட போராளிகள்களத்தில் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்கள் ஏன்வீரமரணமடைந்தார்கள்: என்பதை எம்மக்கள் சிந்திக்கவேண்டும். இந்த வரிசையில் இன்று இந்த கடற்கரும்புலிகள் ஐவரும் மக்களுக்காகவும் மண்ணிற்காகவும் தமது உடலைப் பொடிப்பொடியாக்கியுள்ளனர். இவர்களுக்கு மக்கள் செய்யவேண்டியது எந்த இலட்சியத்திற்காக தங்கள் உயிரை அர்ப்பணித்தார்களோ அந்த இலட்சியத்தை அடைவதற்கு போராடவேண்டியதே ஆகும்.

இறைமையை உலக நாடுகளுக்கு அடகுவைத்து இன்றைய அரசு எமது புனிதமான போராட்டத்தை கடல்-வான் தரை ஆகியமூன்றுமார்க்கங்களிலும் முறியடிக்க முயற்சி மேற்கொண்டுள்ளது இன்று நிலைமை என்ன அவர்களின் அத்தனை யுக்திகளையும் முறியடித்து புனிதப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது உலகில் உள்ள எந்த ஒரு நாட்டிலும் இங்கு நடைபெறும் யுத்தம் போல யுத்தம் நடைபெற்றதா? இல்லை வவுனியாவை பாரிய படை அணி வ் கனரகவாகனங்களுடன் விமானத்தில் இருந்து குண்டுமாரி பொழிய ஆக்கிரமிப்பை மேற்கொண்டது எம்மவர்கள் எழுந்துநின்று உறுதியோடு போரிட்டனர். எம்மவர்களின் உறுதியை சுதந்திர உணர்வை ஆக்கிரமிப்பாளர்களால் அழிக்கமுடிந்ததா? இலங்கை ஒரு தீவு இங்கு இரண்டு நாடுகள் இன்று இரண்டு நாடுகளுக்கும் எல்லைகளை உண்டாக்குவதற்கே போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றது. இந்த புனிதமான போராட்டத்தில் மக்கள் எல்லோரும் சேர்ந்து போராடுவதே இந்த கடற்கரும்புலிகளுக்கு நீங்கள் செலுத்தும் அஞ்சலி ஆகும் என்றார். (137)

## உற்சவம்

[யாழ்ப்பாணம்]

ஊரெழு சக்திபுரம் சிவ பூரணி காளியம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 17ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெற்று வைகாசி பூரணையுடன் நிறைவு பெறும்.

## பதிவு செய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன சகல ஊழியர்களும் சீழ்க்காணும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் கிழமையில் இரண்டு நாட்களில் தமது வரவைபதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை, சங்கானை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் நாவலர்வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் தற்காலிக காரியாலயம் ஆகியவற்றிலும் பதிவு செய்யலாம்

# "உலகில் அடக்கப்பட்ட மக்களுக்கு எமது போராட்டம் வழிகாட்டியாக அமைந்துள்ளது" - ஆர்த்தி

[சித்தன்கேணி]

''சயனைட்குப்பியை கழுத்தில் தொங்கவிட்டு யுத்தகளத்திற்கு செல்லும் போராட்டம் உலகிலேயே இன்று தமிழீழத்தில் தான் நடந்துகொண்டிருக்கிறது''

வட்டுக்கோட்டையில்நடந்த கடற்கரும்புலிகள்நினைவு எழுச்சிக்கூட்டத்தில் யாழ் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி இவ்வாறு கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது: உலகத்திலே அடக்கப்பட்ட மக்களுக்கும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கும் எமது போராட்டம் வழிகாட்டியாக அமைந்துள்ளது

அஹிம்சைப் போராட்டத்தின் உன்னத நிலைமையை உலகுக்கு உணர்த்திய போராட்டமும் தமிழீழத்தில்தான் நடைபெற்றது உலகத்திலுள்ள அடக்கப்பட்ட மக்கள் இன்று எமது போராட்டத்தை பார்த்து தாமும் நம்பிக்கை கொண்டுள்ளனர். உலகில் கப்பல்களை அழிப்பதற்கு கடற்கண்ணிகள் தான் பாவிக்கப்படுகின்றன. ஆனால் தமிழீழத்தில் எமது வீரர்கள் தாங்களே கடற்கண்ணியாக மாறுகின்றனர்.

இந்தக் கடற்கரும்புலிகள் இறுதிக்கணத்தில்கூட இன்னும் ஒரு தமிழன் என்னுடைய துப்பாக்கியை ஏந்தி எனது இலட்சியத்தை பெற்றுத்தருவான் என்ற நம்பிக்கையில் மடிகின்றனர். இவர்களுடைய கனவை நனவாக்க நாம் எல்லோரும் போராடுவதே இவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

யாழ் மாவட்ட மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு மூர்த்தி, வலிகாமம் மேற்கு அரசியல் பொறுப்பாளர் திரு. பகீன், யாழ் மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு: சிட்டு, வட்டுக்கோட்டை கோட்ட அவைத் தலைவர் திரு. எஸ் குலசூரியன், வலிகாமம் அரசியல் துணைப்பொறுப்பாளர் திரு: பாலன் ஆகியோரும் உரையாற்றினார்கள் [137)

# முதற்கரும்புலி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருபோராளி என்றால் எதிரியை அழிப்பதற்கு எதையும் செய்வதற்குத்தயாராகஇருக்க வேண்டும் ஏன் தன் உயிரைக் கூடத்தரத் தயாராக இருக்க வேண்டும் அப்பேர்ப்பட்ட போராளிகளைத் திரட்டி இன விடுதலைக்காக தியாக இயக்கத்தை உருவாக்கிய பிரபாகரனே ஒரு மாபெரும் முதல் தர கரும்புலி.

1981ம் ஆண்டு குட்டிமணி தங்கத்துரை போன்றவர்கள் ஸ்ரீலங்கா அரசினால் பிடிபட்டு வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டகாலம் ரெலோவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒன்றாக நட்பாக இருந்த காலத்தில் நானும் சென்னையில் இருந்தேன்.

சிறைவைக்கப்பட்ட இரு தலைவர்களையும் விடுவிப்பதற்கு ஒரு திட்டம் தீட்டினோம். அதன்படி வெலிக்கடைச் சிறையில் இருந்து அவர்களை மீட்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

வெலிக்கடையில் இருந்து நீதிமன்றம் கொண்டு வரும் போது அவர்களை மீட்பது சாதாரண விடயமல்ல மேலும் அவர்களை மீட்டாலும் தமிழீழத்திற்கு கொண்டுவருவது மிகப்பெரும் விடயம். அவர்களைச்சுற்றி பலலாயிரக்கணக்கான இராணுவத்தினரின் பாதுகாப்பு இருந்தது. இது சாத்தியப்படக் கூடிய விடயமல்ல என்று நான் இருஇயக்க உறுப்பினர்களிடமும் தெரிவித்தேன்.

மேலும் அப்படிச் செய்யும் போது அவர்களின் உயிர்களுக்கும் ஆபத்து உண்டுபண்ண வழிவகுக்கும் என்றும் தெரிவித்தபோது பிரபாகரன் தினைந்து பேர்கொண்ட தற்கொலைப்படையுடன் தானே தலைமை தாங்கிச்சென்று அவர்களை மீட்பேன் என்ற போது நான் உண்மையிலேயே அதிர்ச்சியடைந்து போனேன்.

அப்போது ரெலோ பிரமுகர் சபாரத்தினத்திடம் பிரபாகரனின் முடிவைத்தெரிவித்து அவரின் தற்கொலைப் படையில் ரெலோஇயக்கத்தில் இருந்து எவரும் போகப்போகிறீர்களா என்று கேட்டபோது அவர் இல்லை என்று கூறினார்.

அவரது முடிவால் புலிகள் இயக்கம் அழிந்துவிடும் என்றும் தமிழ் மக்களுக்கும் பெரும் துன்பம் நேரிடும் என்றும் பிரபாகரனிடம்நான் எடுத்துக் கூறி மாற்றுத் திட்டம் ஒன்று தீட்டினோம். அப்போது அமெரிக்க தூதுவர் அடிக்கடி யாழ் வந்துபோய்க் கொண்டிருந்தமையால் அவரைக் கடத்தி வைத்துக் கொண்டு குட்டிமணி தங்கத்துரை போன்றோரது விடுதலைக்கு பேரம் பேசுவது என்பதாகும். ஆனால் எமது திட்டம் பூர்த்தியாவதற்கு முன் சிறைவைக்கப்பட்ட இருதலைவர்களுக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டது.

1986 ஆண்டு ஒரு சமயம் எம் ஜி ஆர் சேலம் சென்றிருந்தபோது தமிழ் நாட்டுப் பொலிஸ் அதிகாரியாக இருந்த மோகனதாஸ் என்பவரால் தலைவர் பிரபாகரன் நான் மற்றும் சில பிரமுகர் எதிர் பாராத வரையில் கைது செய்யப்பட்டோம்.

மேலும் எம்மிடம் இருந்த ஆயுதங்கள் தொலைத் தொடர்பு சாதனங்களும் பறிக்கப்பட்டது மறுநாள் நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம். ஆனால் ஆயுதங்களோ தொலைத்தொடர்பு சாதனங்களோ திருப்பித் தரப்படவில்லை, இதனால் பிரபாகரன் பெரும் ஆத்திரமடைந்ததுடன் ஒரு பெரும் விடுதலை இயக்கத்தலைவரையும் முக்கிய பிரமுகர்களையும் எவ்வித கௌரமும் இன்றிச்சாதாரண பொலிஸ்காரர்கள் கைது செய்து விசாரணை செய்தது அவமானமாகவும் கருதினார்.

தமக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானத்தை நிவர்த்தி செய்யவும், தமிழீழ மக்களின் உரிமைகளைக் காக்கவும் உயிராக இருந்த ஆயுதங்களையும் தொலைத்தொடர்பு சாதனங்களையும் மீளத் தன்னிடம் ஒப்படைக்கும்வரை சாகும்வரை உண்ணாவிரதமிருப்பதாகத் தெரிவித்து உண்ணாவிரதக் களத்தில் குதித்தார். இவரின் இச்செயல் தமிழ்நாட்டையே ஒரு கலக்குக் கலக்கியது. அரசியல் பிரமுகர்களும் பத்திரியாளர்களும் இந்த உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டார்கள். ஆனால் பிரபாகரன் மறுத்துவிட்டார்.

இவ்விடயம் சேலத்திலுள்ள எம். ஜி. ஆருக்கும் எட்டியது: அவர் என்னுடன் தொடர்பு கொண்டுபிரபாகரனின்சாகும் வரையிலான உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும தாம் பிரபாகரன் விடயத்தில் அதிக அக்கறையுள்ளவர் என்றும் கேட்டுக்கொண்டார். அவரின் உரையாடலை பிரபாகரனிடம் தெரிவித்தபோதுஎமது உயிர் மூச்சான ஆயுதம், தொலைத்தொடர்புச் சாதனம் கிடைக்கும்வரை தான் உண்ணாவிரதம் இருப்பேன். இதில் மாற்றமில்லை என்றார்.

இதை நான் மீண்டும் எம். ஜி. ஆரிடம் தெரிவித்தபோது அவர் தன்னில் நம்பிக்கை இல்லையா என்றார். எமது தலைவர் சரியென உணர்வதை செய்தே முடிப்பார். அவரை மாற்றமுடியாது. ஆயுதங்களையும் தொலைத்தொடர்புச் சாதனங்களையும்ஒப்படைக்கவேண்டும் என்றேன்.

இதற்கு மறுநாள் எம். ஜி. ஆர். நேரில்வந்து ஆயுதங்களையும் தொலைத்தொடர்பு சாதனங்களையும் ஒப்படைத்த பின்பே பிரபாகரன் சாகும் வரையான உண்ணாவிரதத்தினை முடித்தார். அப்பேர்ப்பட்ட தன்னுயிரைக் கொடுத்து தமிழீழத்தை காப்பாற்றும் திடமான உறுதிபூண்டவர் தலைவர் பிரபாகரன்: (51

# 10 சுகாதார பரிசோதகர் மீண்டும் நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் பத்து இளைப்பாறிய பொது சுகாதார பரிசோதகர்கள் மீண்டும் ஒரு வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில்நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

இதற்கான அனுமதியை கொழும்பு சுகாதார அமைச்சிலிருந்து யாழ் பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் பெற்றுள்ளார்.

பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர். திரு கே.இராசசிங்கம்; நல்லூர், திரு. பி: கந்தையா, அச்சுவேலி; திரு: கே; தங்கவேலாயுதம் நெல்லியடி, திரு. எஸ். முத்துச்சாமி வல்வெட்டித்துறை, திரு.எஸ் குணரத்தினம் ஆனைக்கோட்டை, திரு. கே. கந்தையா சுழிபுரம், திரு. எஸ். நவரத்தினம், கீரிமலை. திரு எம், இராஜதுரை ஊர்காவற்துறை, திரு எஸ் இராஜநாயகம்பிள்ளை அல்லைப்பிட்டி, திரு. ஆர். எல். சேவியர் கொடிகாமம்.

இன்றிலிருந்து 15-ம் திகதி) இவர்கள் தமது வேலைகளைப் பொறுப்பேற்பார்கள்: (153]

# வளைகுடாப் போரினால் வேலையிழந்த 70,000 இலங்கையருக்கு புனர்வாழ்வுத் திட்டம்

(கொழும்பு)

வளைகுடா யுத்தம் காரணமாக வேலையிழந்து தாயகம் திரும்பியுள்ள 70 ஆயிரம் இலங்கைதொழிலாளர்களுக்கு உதவுமுகமாக புனர்வாழ்வுத் திட்டம்ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவும் முகமான செயல்முறை, விதிமுறைபற்றிய பயிற்சிகள் சிரேஷ்ட ஆலோசகர்களுக்கு இந்த வாரம் வழங்கப்படவுள்ளன.

இந்த ஆலோசகர்கள் சகல மாவட்டக் கிளைகளிலும் நியமிக்கப்படுவார்கள்:

இதற்கு சர்வதேச தொழில் ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாட்டு அபிவிருத்திப் பிரிவின் ஒத்துழைப்பும் நாடப்பட்டுள்ளது: (பூ)

★ இந்திய அரசியலில்

# ராஜீவ், சிங்கின் எதிர்காலம் 20-ம் திகதி முடிவாகும்

(புதுடில்லி)

லோக்சபா மற்றும் சில சட்டப் பேரவைகளுக்கான தேர்தலின் முதற் கட்ட வாக்களிப்பு, எதிர்வரும் 20ந் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

முதற் கட்ட வாக்களிப்பில் ஒன்பது மாநிலங்களிலும், நான்கு யூனியன் பிரதேசங்களிலும் வாக்களிப்பு நடைபெறும்.

ஹரியாணு மற்றும் மேற்கு வங்காளத்தில் அனைத்துச் சட்டசப் பேரவைத் தொகுதிகளுக்கும், உத்தரப் பிரதேசத்தில் 425சட்டப்பேரவைத்தொகுதிகளில்பாதிக்கும் மொத்தத்தில் 205லோக்சபா இடங்களுக்கும் முதல்கட்டத்தில் வாக்களிப்பு நடைபெறும்.

இரண்டு முன்னுள் பிரதம மந்திரிகளான திரு ராஜீவ் காந்தி, திரு. வி பி.சிங் ஆகியோரின் தேர்தல் வருங்காலம் முதற் கட்ட வாக்களிப்பில் முடிவுசெய்யப்படும்.

துணைப் பிரதமர் திரு தேவிலால், மேற்கு வங்காள முதல் அமைச்சர் திரு. ஜோதி பாசு, உத்தரப் பிரதேச முதலமைச்சர் திரு.முலாயம்சிங் யாதவ், முன்னுள் ஹரியாணு முதல் அமைச்சர் திரு. பன்சிலால் மற்றும் முக்கிய அமைச்சர்களின் தேர்தல் முடிவுகள் அன்றையதினம் தெரியவரும்.

இரண்டாம் கட்ட வாக்களிப்பு, எதிர்வரும் 23ந் திகதி நடைபெறும் 15 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 115 லோக்சபாத் தொகுதிகளுக்கும், கேரளத்தின் சகல சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் நடைபெறும்.

மூன்ருவது இறுதிக் கட்ட வாக்களிப்பு, எதிர்வரும் 26ந் திகதி 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 190 லோக்சபாத் தொகுதிகளுக்கும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும், உத்தரப் பிரதேசத்தில் சட்டப் பேரவையின் எஞ்சிய தொகுதிகளுக்கும் நடைபெறும்.

## இலங்கையின் சனத்தொகை

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகை அடுத்த ஆண்டில் ஒருகோடியே 90 லட்சமாக அதிகரித்துவிடும் என்று குடிசன மதிப்புத்தலைவர் டாக்டர் அபயக் கான் தெரிவித்துள்ளார். (வி)

### க. பொ. த.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்யப்பட்டன. அதை விடுத்து தற்பொழுது கொழும்பிலிருந்து தரை மார்க்கமாக 'றெட்பானு' உதவியுடன் இவ்வினுத்தாள் தொகுதி வருவதாகவும். பெரும்பாலும் இன்று எவ்வேளையிலும் எமது திணைக்களத்துக்குக் இவை கிடைக்குமென எதிர்பார்க்கப் படுவதாகவும் அவர் மேலும் கூறினர். (152)

## பலாலி ஷெல் சாவகச்சேரி சென்றது

(சாவகச்சேரி)

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட 3ஷெல்கள் நேற்று முன்தினமிரவு சாவகச்சேரியில் விழ்ந்து வெடித்துள்ளது.

தென்மராட்சி நோக்கி பலாலியிலிருந்து முதற் தடவையாக ஷெல்கள் ஏவப்பட்டுள்ளன. கல்வயல் 1ம் கட்டையடியில் இரு ஷெல்லும் நுணுவில் மேற்கு துர்க்கை அம்மன் கோவில் விதியில் ஒரு ஷெல்லும் விழ்ந்து வெடித்தன.

வெறும் வளவுகளில் இவை வீழ்ந்து வெடித்ததினுல் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

### ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை முல்லைத்தீவில் ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வந்துள்ளது. (கி)

### வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே பலர் பிடிபட்டிருக்கலாமென கூறப்படுகிறது. இவர்களில் ஒருவரான ஓமந்தை விளாத்தி குளத்தைச் சேர்ந்த வேலும்மயிலும் பாலா (23 வயது) என்பவர் 4-ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்றிக்கெய்தகுளம் பகுதியைச் சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவர் தனியில் துப்பாக்கிசூட்டு காயங்களுடன் பிடிபட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

2-ம் தேதி மாணிக்கவளவு ஓமந்தைப்பகுதியில் படையினரால் பிடிபட்ட சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் அவ்விடத்தில் சுட்டு எரிக்கப்பட்டு கருகியநிலையில் காணப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (56)

### ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோவிலிருந்து 12க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன. இவற்றில் பல நேபாம் குண்டுகளாகும்.

இதேவேளை, இந்த முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கிப் பலத்த ஷெல் தாக்குதலும், துப்பாக்கிச் சூடும் இடம்பெற்றன. (க)

### ஐம்பத்திரண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

போலி தஸ்தாவேஜுகளுடன் சென்ற இந்த 52 பேரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் அதிகளவில் அடங்குவார்கள்.

நேற்று முன்தினம் இந்த 52 பேரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி-கி)

### வாழைச்சேனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த காகித ஆலை ஊழியர்களாவர்.

வி.தங்கராசா, எஸ். வசந்தகுமார், கி. சந்திரவதனன், வி. பாலதேவன், என். பதமநாதன், ரி. வீரபத்திரன், ரி.புஸ்பராசா, எஸ் கோபாலபிள்ளை, பி நாகலிங்கம், எஸ்.செல்வராசா, இ கணேசமூர்த்தி, என். கோபாலன் ஆகியோர் காணமல் போனவர்களாவர். (150)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் கில்மன்**

(கிருஸ்ணசாமி இராமச்சந்திரன்)

| தமிழீழ மண்ணில்: | தமிழீழ மீட்பில்: |
|---|---|
| 07-12-1965 | 14-05-1989 |

எங்களது மண்ணில் எதிரிகளின் காலடிகள்
ஏற்குமோ தமிழா கிளர்ந்தெழுந்தான் "கில்மன்"
செங்குருதி சிந்திடவே போராட்டக் களத்தில்
செங்கதிரோன் எனவே ஒளியாகி நின்ருன்.

"கப்டன் கில்மனின் கனவினை வெல்வோம்"

- தென்மராட்சி மக்கள்

(ஏ-1308)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence number B/188806/21.

## தீவுப் பகுதி பாடசாலைகள் மீண்டும் பழைய இடங்களில்

(வேலணை)

யாழ். நகரப்பாடசாலைகளில் தற்காலிகமாக இயங்கி வந்த வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகள் மீண்டும் 20-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தத்தமது பாடசாலைகளிலேயே இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த சகலரும் தத்தமது சொந்தப் பாடசாலைகளுக்குக் கடமைக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு பகுதியில் மீண்டும் ப. நோ. கூ. சங்கங்களையும் இயங்க வைக்கும் முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டும் வருவதாக தெரியவருகிறது. (75-152)

## பல்கலைக்கழக அனுமதி கடிதம் அனுப்பப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

1989ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தெரிவுக் கடிதங்கள் கடந்த வாரம் முதல் தபாலில் அனுப்பப்பட்டுவருகின்றன.

இம்முறை 9,200 மாணவர்கள் 1990/91 ஆம் பல்கலைக்கழக கல்வி ஆண்டுக்கு தெரிவு செய்யப்படவிருக்கிருர்கள்.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பான மேல் மனு சபை இன்னும் இரு வாரங்களுக்குள் நியமிக்கப்படவிருக்கிறது. (153)

## தனியார் வியாபாரிகளுக்கு கப்பல் வசதி

(யாழ்ப்பாணம்)

தனியார் வியாபாரிகளும், கம்பனிகளும் வடபகுதிக்குக் கப்பல்மூலம் உணவுப் பொருட்களையும் மற்றும் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் கொண்டுவருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வடபகுதிக்கான போக்குவரத்து சீரற்ற நிலையில் இருப்பதால் கப்பல்கள் மூலம் உணவுப் பொருட்களை கொண்டு வருவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

## கம்பன் கோட்டத்தில் நாடக அரங்கு

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை கம்பன் கழகத்தின் 10-வது ஆண்டு நிறைவின் 3-வது நிகழ்ச்சித்தொடரில் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'நாடக அரங்கு' நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சி மாலை 3 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் கலைப் பேரரசு ஏ ரி. பொன்னுத்துரையின் தலைமையில் நடைபெறும். இவ் அரங்கின் தொடக்கவுரையை யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் திரு.இ. பாலசுந்தரம் நிகழ்த்துவார்.

இதைத்தொடர்ந்து நடிகமணிகள் திரு வி. என். செல்வராஜ், திரு எம். கனகரத்தினம், திரு. வி. செல்வரட்ணம் ஆகியோர் தமது 'கோவலன்', 'பூதத்தம்பி', 'வள்ளி திருமணம்', 'நல்ல தங்காள்', 'சத்தியவான் சாவித்திரி', 'அரிச்சந்திர மயான காண்டம்' ஆகிய நாடகங்களிலிருந்து முக்கிய கதைப் பகுதிகளை 'காட்சியும் கானமுமாக' நாடக அரங்கில் மேடையேற்றுவார்கள். (சி)

## 7,000 படையினர் தாக்குதலில் ஈடுபட்டனர்

[வவுனியா]

வவுனியாவின் அண்மையில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கையில் 7000க்கும் மேற்பட்ட படையினர் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு உதவியாக 3 பொம்மர்கள், 3 அவ்ரோக்கள், 2 'வை' ரக விமானங்கள், 4 ஹெலிகள், கவச வாகனங்கள், டாங்கிகள் என்பனவும் ஈடுபட்டன.

இம்மோதலில் படையினர் தரப்பில் 85 பேர்வரை கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி கிறிஸ்ரின் பொன்னுபரணம்

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற திரு. அந்திரேஸ்பிள்ளையின் அன்பு மனைவியுமாகிய திருமதி கிறிஸ்ரின் பொன்னுபரணம் காலமாகிவிட்டார். அன்னர் இரத்தினம், மல்லிப்பூ, அருட்சகோதரி வேபியாளு (யாழ். கன்னியர்மடம் M. V. இளைப்பாறிய ஆசிரியை), யோன் யோட்ஜ் பிரான்சிஸ் சேவியர் (லண்டன்), காலஞ்சென்ற யோன் பப்ரிஸ் ஸ்ரெலா ஆகியோரின் அன்புத் தாயாரும், S. அந்தோனிப்பிள்ளை, பிரான்கிஸ் றாபி, இரட்னேஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவசர்.

அன்னரின் நல்லடக்கம் (இன்று) 16-05-91 வியாழக்கிழமை காலை 8-00 மணிக்கு சில்லாலை- பண்டத்தரிப்பு சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- மல்லிப்பூ

சில்லாலை, பண்டத்தரிப்பு. (சீ-4738)